Register No. | | | | | | | | |

TA4A

**5859–23**

(For the candidates admitted from 2017-18 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

# LAW OF EVIDENCE

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
★ LIBRARY ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Men may lie, but documents will not". Critically examine this statement in the light of decided case laws.

   "மனிதன் பொய்சொல்லக் கூடும், ஆனால் ஆவணங்கள் அல்ல" என்ற வாக்கியத்தை தீர்ப்பு வழி சட்டங்களுடன் அலசி ஆராய்க.

2. What is meant by burden of proof? On whom does it lie? Does the burden of proof ever shifts?

   நிரூபிக்கும் சுமை என்றால் என்ன? அது யாரைச் சார்ந்தது? அந்த சுமை எப்போது மாற்றீடு ஆக மாறும்.

3. What is dying declaration? Explain the evidentiary value of dying declaration?

   மரண வாக்குமூலம் என்றால் என்ன? மரண வாக்கு மூலத்தின் சாட்சியத் தன்மையினை விளக்குக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. All confessions are admissions. But all admissions are not confessions – Discuss.

   எல்லாவிதமான குற்ற ஏற்புரையும் ஏற்புரையாகும். ஆனால் எல்லா விதமான ஏற்புரையும் குற்ற ஏற்புரையாகாது - விவாதிக்கவும்.

5. Differentiate the presumption of law and presumption of fact.

சட்ட அனுமானத்தையும், பொருண்மை அனுமானத்தையும் வேறுபடுத்துக.

6. Discuss the law relating to facts which need not be proved?

நிரூபிக்கத் தேவையில்லாத பொருண்மைகள் தொடர்பான சட்ட விதிகளை பற்றி விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Rejection of Evidence

சாட்சியத்தை புறம் தள்ளுதல்

(b) Rules relating to examination of witnesses

சாட்சியங்களின் விசாரணை குறித்த விதிகள்

(c) Hearsay evidence

கேட்டுமொழியும் சாட்சியம்

(d) Presumptions as to document

ஆவணம் தொடர்பான அனுமானம்

(e) Relevancy of facts

தொடர்புடைய பொருண்மைகள்

(f) Evidence

சாட்சியம்

(g) Fact in issue

தீர்வு தரும் பொருண்மை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. During the Police custody a beggar was shot by a station house officer. On whom the burden of proof lies?

காவல் துறையின் காவலிருப்பில் இருக்கிற பிச்சைக்காரர் ஒருவரை, காவல்நிலைய பொறுப்பு அலுவலர் சுட்டுக் கொள்கிறார். நிரூபிக்கும் சுமை எவருடையதாகிறது ?

9. "N" borded Muthu Nagar express train, "N" made his booking through online mode; but his ticket was not confirmed. In this circumstance Muthu Nagar express met with an accident near Ariyalur and due to this "N" died. During online-registration of tickets 'N' has paid the insurance charges. But before the incident, online-ticket charges returned to "N", and later he died. Railway authority denies to insurance claim and reject the application; because of his ticket less travel. In this case which is the question of issue? – Decide.

"N" என்பவர் முத்து நகர் விரைவு ரயிலில் பயணிக்கிறார். "N" தனது ரயில் முன்பதிவை இணையதள சேவையைப் பயன்படுத்தி பெற்றார். ஆனால் அவருடைய பயணச்சீட்டு உறுதி செய்யப்படவில்லை. இச்சூழலில் முத்துநகர் விரைவு வண்டி அரியலூர் அருகில் விபத்தை சந்தித்தது. அதன் விளைவாக "N" மரணித்து விடுகிறார். இணையவழி பயணச்சீட்டு முன்பதிவின்போது "N" - பாதுகாப்பான பயணத்திற்கான காப்புறுதித் தொகையை செலுத்தி இருந்தார். அப்பணம் திரும்ப வரும் முன்னரே "N" மரணித்து விட்டார். ரயில்வே நிர்வாகம் அவருடைய காப்புறுதி வேண்டுதல் மனுவை நிராகரித்தது. ஏனெனில் அவர் பயணச்சீட்டு இல்லாமல் பயணித்தாகக் கருதியது. இவ்வழக்கில் தீர்வு செய்யப்பட வேண்டிய பொருண்மை எது? - தீர்மானிக்கவும்.

10. "S" alleges that "P" who is the superior of "S" scolded and assaulted him in closed room. Thus "S" lodges a complaint. To prove this "S" files a petition before the court demanding the CCTV footage to prove his case. Whether P's Office CCTV recordings can be allowed as an evidence? – Decide.

"S" என்ற ஊழியரை "P" என்ற உயரதிகாரி அவரது மூடிய அலுவலக அறையில் வைத்து திட்டி மற்றும் தாக்கியதாக "S" என்பவர் "P" மீது புகார் அளிக்கிறார். அதற்கு சாட்சியாக "P"-ன் அலுவலக அறை கண்காணிப்பு கேமரா காட்சிகளை சமர்ப்பித்திட "S" நீதிமன்றத்திடம் முறையீடு செய்கிறார். 'P'-ன் அலுவலக கண்காணிப்பு கேமரா காட்சிகளை சாட்சியமாக அனுமதிக்க இயலுமா? - தீர்மானிக்கவும்.

Register No. | | | | | | | | |

TA4B

5860–23

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

ADMINISTRATIVE LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the scope of administrative law and bring out the difference between administrative law and constitutional law.

நிர்வாகச் சட்டத்தின் நோக்கெல்லையை விவாதிக்கவும். நிர்வாகச் சட்டத்திற்கும், அரசமைப்புச் சட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்துக.

2. Discuss with the help of decided cases, the limits on the delegation of legislative power in India.

இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் மீதுள்ள வரம்புகளை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியோடு விளக்குக.

3. Explain the meaning of administrative discretion and examine how the exercise of discretion is subjected to Judicial Scrutiny with case laws.

நிர்வாக தன் விருப்புரிமை என்பதை விளக்கி, தன் விருப்புரிமை எப்போது நீதித்துறை கண்ணோட்டத்திற்கு உள்ளாக்கப்படுகிறது என்பதை முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the essentials of fair hearing.

நியாயமான விசாரணைக்குரிய மூலக்கூறுகளை விளக்குக.

5. Discuss the liability of state for the tort committed by its servants in India.

இந்தியாவில் அரசு அலுவலர்களால் செய்யப்படும் தீங்கிற்கு அரசுக்குள்ள கடப்பாட்டினை விவாதிக்கவும்.

6. Give an account of Judicial Control of Public Corporation in India.

இந்தியாவில் பொது குழுமங்கள் மீதான நீதித்துறை கட்டுப்பாடுகளை தொகுத்துக் கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Sovereign functions
இறைமைச் செயல்கள்

(b) Ridge vs Baldwin
ஃரிட்ஜ் எதிர் பால்ட்வின்

(c) Writ of Mandamus
கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை

(d) Herschell's doctrine
ஹெர்ஷல் விதி

(e) Post decisional hearing
தீர்ப்புக்கு பின் விசாரணை

(f) Franks Committee
பிராங்க்ஸ் குழு

(g) Central Vigilance Commission
மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A lecturer in a Government College filed a complaint with the principal against a student for his misbehaviour in the class-room. An enquiry committee was constituted. After the enquiry the college expelled the student. He filed a case, on the ground that, he was not given an opportunity to cross examine the lady lecturer. Will he succeed?

ஒரு பேராசிரியர் வகுப்பறையில் மாணவனின் தவறான நடத்தை குறித்து கல்லூரி முதல்வரிடம் முறையீடு ஒன்றினை தாக்கல் செய்கிறார். இதற்காக ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, விசாரணைக்கு பிறகு அம்மாணவன் கல்லூரியிலிருந்து நீக்கப்படுகிறார். அம்மாணவன் வழக்கு ஒன்றினை தாக்கல் செய்து, தனக்கு அப்பேராசிரியையை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்படவில்லை என வாதிடுகிறார். அவர் வாதத்தில் வெற்றி பெறுவாரா?

9. 'A' is an undertrial prisoner. He was acquitted in the year 2000. But he has not been released from the prison till date. 'A' files a writ petition and also seeks compensation against the state in the same writ petition. The State pleads that the petitioner cannot claim compensation in a writ petition. Decide.

'அ' என்பவர் ஒரு விசாரணைக் கைதி. அவர் 2000-ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். இருந்த போதிலும் இது நாள் வரையில் அவர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படவில்லை. எனவே அவர் ஒரு நீதிப் பேராணை மனுவை தாக்கல் செய்கிறார். அதே மனுவில் அவர் அரசுக்கு எதிராக இழப்பீடும் கோருகிறார். அரசு மனுதாரர் நீதிப் பேராணை மனுவில் இழப்பீடு கோர முடியாது என்று வாதிடுகின்றது. முடிவு செய்க.

10. 'X' is an employee of the Government of Tamil Nadu. Disciplinary proceedings have been initiated against him. He requires his Service Register which is in the custody of the State to prove his innocence. The State replies that since the Service Register is relating to the affairs of the state, it cannot be disclosed to 'X' – Decide.

'X' என்பவர் தமிழ்நாடு அரசின் ஊழியராவார். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் தான் நிரபராதி என்பதை நிரூபிக்க அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தனது பணிப் பதிவேட்டை கேட்கிறார். பணிப்பதிவேடானது அரசு விவகாரத்தைக் குறித்ததால் அதனை 'X'-க்கு காட்ட இயலாது என்று அரசு மறுக்கிறது. தீர்மானிக்க.

---

Register No. | | | | | | | | |

**TA4C**

**5861-23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically examine the Powers of the Government to refer an industrial dispute for adjudication.

   தொழிற்துறை சச்சரவுகளை கட்டாயத் தீர்ப்புமுறைக்கு சாட்டி அனுப்புதலுக்கான அரசின் அதிகாரத்தை கூர்ந்தாய்வு செய்க.

2. Explain about the procedure for registration of a Trade Union? What are the circumstances in which the Registrar can cancel the registration?

   ஒரு தொழிற்சங்கத்தை பதிவு செய்வதற்கான நடைமுறைகள் பற்றி விளக்குக. எந்தெந்தச் சூழ்நிலைகளில் தொழிற்சங்கப் பதிவு பதிவாளரால் ரத்து செய்யப்படலாம்?

3. Explain the procedure for fixing and revising minimum wages under the Minimum Wages Act, 1948.

   1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியங்கள் சட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கின்ற மற்றும் மாற்றியமைக்கின்ற முறையினை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define "Workman" under the Industrial Disputes Act, 1947. Examine the tests evolved by the Courts to determine master and servant relationship.

   1947-ம் ஆண்டு தொழிற்துறை சச்சரவுகள் சட்டத்தின்கீழ் "பணியாளர்" என்பதை வரையறை செய்க. எஜமானருக்கும் ஊழியருக்கும் உள்ள உறவை தீர்மானிப்பதற்கு நீதிமன்றங்களால் படிப்படியாக உருவாக்கப்பட்ட தகுதிச் சான்றுகளை ஆராய்க.

5. How the timely payment of wages had been ensured under the Payment of Wages Act, 1936?

1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்குதல் சட்டம் உரிய காலத்தில் ஊதியம் வழங்குதலை எவ்வாறு உறுதிப்படுத்துகிறது?

6. Define Standing Orders. State the procedure for Certification of Standing Orders.

நிலையாணைகள் என்பதை வரையறு. நிலையாணைகளை சான்றளித்தலுக்கான நடைமுறைகளை குறிப்பிடுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Lay off

நிறுத்தி வைத்தல்

(b) Settlement

தீர்வு

(c) Collective Bargaining

கூட்டுப் பேரம்

(d) Wage Board

ஊதிய வாரியம்

(e) Strike

வேலை நிறுத்தம்

(f) Works Committee

பணிக்குழு

(g) Protected Workman

பாதுகாக்கப்பட்ட தொழிலாளி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்:

8. An employer declared lay off to his workmen and offered them alternate employment in his branch office situated at 10 km away from his main factory. The workers refused to accept the work and claimed lay off compensation. Decide.

பணியாளர் ஒருவர் தனது தொழிலாளர்களை வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்து அதற்கு பதிலாக 10 கி.மீ. தொலைவில் இருக்கும் தனது கிளை அலுவலகத்தில் வேலை செய்யப் பணிக்கிறார். தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்து நிறுத்தி வைத்தலுக்கான இழப்பீடு கோரினார்கள். முடிவு காண்க.

9. Ten workmen of the textile mill applied for registration of a newly formed Trade Union to the Registrar of the Trade Unions. While the application for registration was pending, four of them resigned their Job. The Registrar permitted registration of the Trade Union. Decide.

நூற்பாலை ஒன்றில் பணிபுரிந்து வந்த பத்து தொழிலாளர்கள் தாங்கள் புதிதாக அமைத்த தொழிற்சங்கத்தினை பதிவு செய்வதற்காக தொழிற்சங்க பதிவாளருக்கு மனு செய்திருந்தனர். அம்மனு பரிசீலனையில் இருந்த போது அவர்களில் நான்கு தொழிலாளர்கள் தங்கள் வேலையினை ராஜினாமா செய்தனர். பதிவாளர் தொழிற்சங்கப் பதிவினை அனுமதித்தார். முடிவு காண்க.

10. While working on a machine, a worker accidentally drops a valuable testing appliance which is broken. The employer deducts the value of the appliance from the wages of the worker. Whether the deduction is justified?

தொழிலாளி ஒருவர் இயந்திரத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும்போது எதிர்பாராமல் ஒரு விலையுயர்ந்த பரிசோதிக்கும் கருவியை தவறி கீழே போட்டு விடுகிறார். அது உடைந்து போகிறது. அந்தக் கருவியின் விலையை பணியாண்மையர் தொழிலாளியின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்கிறார். அந்தப் பிடித்தம் நியாயமானதா?

Register No. [ | | | | | | | | ]

# TA4D

5894-23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three - year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define International law, whether the definition is exhaustive or not?

   பன்னாட்டுச் சட்டத்தினை வரையறு, இவ்வரையறை முழுமையான ஒன்றா? இல்லையா? என்பதை விவரி.

2. Describe about the subjects of International law.

   பன்னாட்டுச் சட்டத்தின் கருப்பொருள்களை விவரி.

3. Define State succession and discuss the rules of succession with regard to rights and duties.

   நாட்டு வாரிசுரிமையை வரையறு. நாட்டு வாரிசுரிமையின் விதிகளை அதன் உரிமை மற்றும் கடமை அடிப்படையில் விவாதி.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the types of States?

   நாடுகளின் வகைகள் யாவை?

5. In what matters, State is internationally responsible?

   எவ்வகையான விடயங்களில், சர்வதேச அரங்கில் ஒரு நாடு பொறுப்பாக முடியும்?

6. Describe about extradition in detail.

   கைதிகளை மீட்டொப்படைத்தல் பற்றி விரிவாக விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) North Sea Continental Shelf case

வடகடல் கண்டத்திட்டு வழக்கு

(b) Caroline case

கரோலைன் வழக்கு

(c) Arantzazu mendi case

அரான்ட்ஸாசு மெண்டி வழக்கு

(d) Dualism.

இருபொருள் வாதம்

(e) Italy vs. Peru.

இத்தாலி – எதிர்–பெரு

(f) UNO

ஐ. நா. சபை

(g) Rule of Erga Omnes

அனைவருக்கும் பொதுவான என்னும் விதி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. There was a dispute between States 'A' and 'B' with respect to sovereignty over the island of X. State 'A' is claiming that it had acquired the island under a treaty of 1720 from Spain. 'B' is claiming that island was never under the occupation of State 'A'. So, it does not have right to transfer. Discuss.

'X' – என்ற தீவின் இறையாண்மை குறித்து 'A' நாட்டுக்கும் 'B' நாட்டுக்கும் இடையே பிரச்சனை இருந்தது. 'A' நாடானது 1720-ம் வருடத்தில் ஸ்பெயின் நாட்டுடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அத்தீவைப் பெற்றதாக கூறுகிறது. ஆனால் 'B' நாடானது அத்தீவானது எந்தச் சூழ்நிலையிலும் 'A' நாட்டின் கையில் இருந்ததில்லை என்று கூறுகின்றது. அதனால் 'A' நாட்டிற்கு மாற்றியளிக்க இயலாது என்று கூறுகின்றது. இதற்கு உமது கருத்துரையை கொடுக்கவும்.

9. Country 'Z' was suspended from the membership of the UNO by the Secretary General. Country 'Z' approaches the ICJ against this move. Can 'Z' succeed?

'Z' நாட்டின் உறுப்பினரத்துவத்தை ஐ.நாவின் பொதுச்செயலாளர் நிறுத்தி வைத்து விட்டார். 'Z' நாடு இந்த செயலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றம் நாடுகிறது. 'Z' நாடு வெற்றி பெறுமா?

10. An Ambassador of a country enters into a contract with an Indian Interior Designer to design his country's embassy situated in India for a sum of Rs. 5 Crores. After the designing was over the Ambassador refuses to pay the money and claims immunity. Advise the Indian Interior Designer.

ஓர் இந்திய உள்–அலங்கார வடிவமைப்பாளருடன் ஒரு வெளிநாட்டுத் தூதுவர் இந்தியாவில் அமைந்துள்ள அந்நாட்டுத் தூதரகத்தை வடிவமைக்க ரூ. 5 கோடிக்கு ஒப்பந்தம் போடுகிறார். பின்னர் வேலை முடிந்தவுடன் ஒப்பந்தத் தொகையை கொடுக்க மறுத்து தூதருக்கான விலக்களிப்பு கோருகிறார். அந்த இந்திய உள்–அலங்கார வடிவமைப்பாளருக்கு அறிவுரை வழங்குக.